**வாக்குமூலம்**

**முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்**

| | | |
|---|---|---|
| வழக்கு எண; | : | SC 60/2023 |
| வழக்கு சாட்சி | : | PW1 |
| நாள் | : | 11.03.2026 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மு.யுவராணி | ஜாதி | : | |
| கணவர்– பெயர் | : | முருகன் | தொழில் | : | மருந்துகள் ஆய்வாளர் |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | திருமழிசை | வயது | : | 42 |

எதிரி ஆஜரில்லை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை**

நான் தற்சமயம் மருந்துகள் ஆய்வாளராக உதவி மருந்து கட்டுபாட்டு இயக்குநர் அலுவலகம், காஞ்சிபுரம் மண்டலத்தில் காஞ்சிபுரம் II, சரக மருந்துகள் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் அரசு GO (4D) No.20 சுகாதாரம் மற்றும் குடும்ப நலதுறையின் நாள் 12.07.2013 தேதியிட்ட G.O.படி இம் மாநிலத்திற்கென மருந்துகள் ஆய்வாளராக பிரகடனம் செய்யப்பட்டுள்ளேன். இது **அ.த.சா.ஆ.1** ஆகும். இந்த வழக்கின் எதிரி திரு.வி.செந்தாமரை கண்ணன், வயது 47/2020, உரிமையாளர் M/s விக்னேஷ் மெடிக்கல்ஸ், 1பி, 8வது குறுக்கு தெரு, அன்னை சத்யா நகர், பூத்தபேடு மெயின் ரோடு, ராமாபுரம், சென்னை 89 நான் கடந்த 01.04.2020 அன்று வளசரவாக்கம் சரக மருந்துகள் ஆய்வாளராக பணிபுரிந்த போது மேற்குரிய கடையை ஆய்வு செய்ததேன். ஆய்வின் போது கடையின் உரிமையாளர் மற்றும் மருந்தாளுநரான திரு.வி.செந்தாமரை கண்ணன், பதிவு எண். 13540/A2 இருந்தார். இந்த மருந்தகம் மருந்து உரிமங்கள் படிவம் 20 மற்றும் 21 எண்கள் முறையே 1215/ZIV/20 மற்றும் 1215/ZIV/21 தேதி 19.01.2025 வரை இயங்கலாம் என்பதை அறிந்தேன். மேலும் மருந்துசீட்டு பதிவேட்டினை ஆராய்ந்த போது இந்த மருந்தகம் மருந்து பதிவேட்டில்

பதிவு செய்யப்பட வேண்டிய விவரங்களை சரியாக பராமரிக்கப்படாதது கண்டறியப்பட்டது. மேலும் 10.02.2020 முதல் 01.04.2020 வரை விற்கப்பட்ட மருந்துகள் அனைத்தும் பதிவேட்டில் பராமரிக்கப்படவில்லை. இது மருந்து மற்றும் அழகு சதான பொருட்கள் சட்டம் பிரிவு 18(சி) அதனுடன் இணைந்த விதி 65(3)(1) படி விதி மீறல் ஆகும். இது பிரிவு மருந்துகள் மற்றும் அழகு சாதன சட்டம் பிரிவு 27(டி) தண்டணைக்குரிய குற்றமாகும். மேலும் மருந்துகளின் கொள்முதல் ரசீதுகள் மற்றும் விற்பணை ரசீதுகள் மற்றும் கையிருப்பு நிலை ஆய்வு செய்தபோது புகாரின் அட்டவணை I –ல் குறிப்பிட்டுள்ள மருந்துகளை விற்பனை ரசீது இல்லாமல் விற்பனை செய்துள்ளது தெரியவந்தது. இது மருந்துகள் மற்றும் அழகு சாதன சட்டம் பிரிவு 18(சி) மற்றும் அதனுடன் இணைந்த விதிகள் 65(4)(3)(i) படி விதி மீறல் ஆகும். இது பிரிவு மருந்துகள் மற்றும் அழகு சாதன சட்டம் பிரிவு 27(டி) தண்டணைக்குரிய குற்றமாகும். ஆகவே முரண்பாடுகள் தொடர்பான ஆவணங்களை சமர்பிக்கமாறு எதிரிக்கு தேதியிட்ட 01.04.2020 பிரிவு 22(1)(சிசிஎ)–கடிதம் உரிமையாளருக்கு கொடுக்கப்பட்டது அது **அ.த.சா.ஆ.2** ஆகும். ஆய்வின் போது உரிமையாளர் அளித்த அசல் ஆவணங்கள் மற்றும் பதிவேடுகள் மற்றும் கொள்முதல் ரசீதுகளை நகல்கள் எடுத்து அவற்றில் நானும், உரிமையாளரும் விதி 55–ஏ–ன்படி சான்று ஒப்பம் இட்ட பிறகு அனைத்து அசல் ஆவணங்களையும் சட்ட பிரிவு 22(2ஏ)–ன்படி திரும்ப அளித்தற்கான ஒப்புதல் பெற்றுக்கொண்டேன். ஆய்வின் போது உரிமையாளர் தன்னிலை விளக்க கடிதம் ஒன்றை அளித்திருந்தார். இது **அ.த.சா.ஆ.3 ஆகும்** அதனுடன் சான்றொப்பம் அளிக்கப்பட்ட கடையின் மருந்து உரிமங்கள், கொள்முதல் ரசீதுகள், விற்பனை ரசீதுகள், மருந்து சீட்டு பதிவேடு ஆகியவை முறையே **அ.த.சா.ஆ4 முதல் அ.த.சா.ஆ7 ஆகும்.** கடந்த 08.02.2021 அன்று எதிரிக்கு ஆய்வின் போது இருந்த குற்றங்களுக்காக காரணம் கேட்கும் விளக்க கடிதம் ஒன்று அளிக்கப்பட்டது. இது **அ.த.சா.ஆ.8** ஆகும். மேற்கூறிய காரணம் கோரும்

அறிக்கைக்கு எதிரி 10.02.2021 அன்று பதில் கடிதம் அளித்தார். **இது அ.த.சா.ஆ.9 ஆகும்.** அதில் அவர் கடையில் கூட்ட நெரிசல் அதிகமாக இருந்ததால் மருந்து பதிவேடு மற்றும் விற்பனை ரசீதுகள் சரியாக பராமரிக்க முடியவில்லை என்றும் இதன் பின் வரும் காலங்களில் சரியாக பராமரிப்பேன் என்றும் கூறியிருந்தார். எனவே அவருடைய விளக்க கடிதம் மருந்துகள் மற்றும் அழகு சாதனங்கள் சட்டம் விதிகளின் படி ஒப்புக்கொள்ளும்படி இல்லாததால் இந்த விசாரணை சம்மந்தமான விரிவான அறிக்கையை 17.02.2021 அன்று மருந்து கட்டுபாட்டு இயங்குனர் அலுவலகம், தமிழ்நாடு, சென்னை-6 அளித்து எதிரியின் மீது ஆய்வின் போது சுமத்தப்பட்ட குற்றங்களுக்காக வழக்கு தொடரலாமா என அனுமதி ஆணை வேண்டி இருந்தேன். இது **அ.த.சா.ஆ.10** ஆகும். அதற்கு மருந்து கட்டுபாட்டு இயங்குனர் அலுவலகம், தமிழ்நாடு, சென்னை-6-லிருந்து எதிரியின் மீது வழக்கு தொடர அனுமதி ஆணை R.Dis No.2446/IW2/2021(481) dated 27.02.2021 தேதியிட்ட ஆணையை பெற்றேன். இது **அ.த.சா.ஆ.11.** அதன் படி எதிரியின் மீது விரிவான குற்றப்பத்திரிக்கையை தலைமை குற்றவியல் நீதிமன்றத்தில் சமர்ப்பித்தேன்.

**குறுக்கு விசாரணை :** இல்லை

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM

Digitally signed by S TASNEEM
Date: 2026.03.11 15:00:05 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.